[2020] 5 எஸ்.சி.ஆர் 14

தேஷ் ராஜ்

-எதிர்-

பால்கிஷன் (இறந்தவர்) சார்பற்றுநர் மூலமாக திருமதி. ரோஹிணி

(உரிமையியல் மேல்முறையீடு எண்.433/2020)

ஜனவரி 20, 2020

மாண்புமிகு தலைமை நீதியரசர் திரு.எஸ்.ஏ. பாப்டே

மாண்புமிகு நீதியரசர் திரு. பி.ஆர். கவாய்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. சூர்ய காந்த்

உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908 – கட்டளை VIII, விதி 1 - வணிகமற்ற தகராறுகளில் எதிர்வாதுரையை தாக்கல் செய்வதற்கான காலக்கெடு - 17.03.2017 அன்று சகோதரர்களான மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர் ஆகியோருக்கு இடையே பூர்வீக சொத்தின் ஒரு தளத்தை ரூ.7.5 இலட்சத்திற்கு விற்பனை செய்வதற்கான ஒப்பந்தம் போடப்பட்டது - மேல்முறையீட்டாளருக்கு ரூ.1 இலட்சம் முன்தொகையாக தரப்பட்டது - ஒப்பந்தம் நிறைவேற்றப்படவில்லை - இதற்கிடையில், குறித்தவகை நிறைவேற்றுகைக்காக எதிர்மேல்முறையீட்டாளர் வழக்கு தாக்கல் செய்தார் - மேல்முறையீட்டாளர் எதிருரை தாக்கல் செய்வதற்கான

வாய்ப்பு நிறுத்தப்பட்டது மற்றும் தொடர்ச்சியான தாமதங்கள் மற்றும் காலக்கெடுவை பின்பற்றாததால் எதிர்த்துரைப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை - வணிக நீதிமன்றங்கள் சட்டம், 2015-ஆல் திருத்தப்பட்ட கட்டளை VIII, விதி 1 இன் கீழ் வணிக தகராறு சூழலில் வழங்கப்பட்ட ஓகு டெக் என்ற வழக்கில், அதன் உத்தரவை அடிப்படையாகக் கொண்டு உயர் நீதிமன்றம் மனுவை உடனடியாக தள்ளுபடி செய்தது - முடிவு: வணிகமற்ற தகராறுகளின் தன்மை குறித்து எதிர்மேல்முறையீட்டாளரின் வழக்குரைஞர் எதிர்க்கவில்லை - 2015 சட்டத்தின் பிரிவு 2 (சி)-ன்கீழ் மற்றும் குறிப்பாக உட்கூறு (vii) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுருக்களுக்குள் தகராறு வரவில்லை, ஏனெனில் இங்கு அசையா சொத்து என்பது "வணிகத்தில் அல்லது தொழிலில் மட்டுமே பயன்படுத்தப்படும் தன்மை கொண்டதல்ல" - உயர்நீதிமன்றம், பிரச்சனையின் தன்மையைக் கவனிக்காமல், வணிகத் தகராறுகளுக்கு மட்டுமே பொருந்தும் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் மாற்றியமைக்கப்பட்ட கூற்றுகளின் பார்வையில் தீர்ப்பளிக்கப்பட்ட ஒரு வழக்கின் அகவுரையை தவறாகப் பயன்படுத்தியது - மேலும், மேல்முறையீட்டாளருக்கு பல வாய்ப்புகள் வழங்கப்பட்டன - 01.05.2017 தேதியன்று அவருக்கு சார்வு செய்யப்பட்டது - 02.11.2017 அன்று, கட்டளை VIII, விதி 1-இன் வகையங்களின் கீழ் அதிகபட்ச நீட்டிப்பு காலத்திற்குப் பிறகு 95 நாட்கள் தாமதத்திற்குப் பிறகு, மேல்முறையீட்டாளர் தனது எதிர்வாதுரையை தாக்கல் செய்ததாகக் கூறினார் - தொடர்ச்சியான மற்றும் வெளிப்படையான தவறுகை தொடர்பாக எதிர்தரப்பால் முன்வைக்கப்படும் வாதம் யாதெனில்,

மேல்முறையீட்டாளரின் வழக்குரைஞர் வரவில்லை என்பது - மேல்முறையீட்டாளர் சாதாரண முறையில் மன்னிப்பு கோரினார் - இதை அனுமதிக்கவோ அல்லது ஊக்குவிக்கவோ கூடாது - உ.ந.சட்டத்தின் கட்டளை VIII விதி 1-ன் திருத்தப்படாத சட்டம், எழுத்தளவில் இருந்தபோதிலும், ஏதேனும் வழக்காடிகளோ அல்லது வழக்குரைஞர்களோ தங்களது சொந்த விருப்பத்தின்படியே எதிருரை தாக்கல் செய்வதற்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது - உ.ந.சட்டத்தின் கீழ் வகுத்துரைக்கப்பட்ட காலக்கெடுவின் பின்புலத்தில் உள்ள சட்டத்தின் உட்கருத்தைப் பொறுத்தவரையில் தகராறுகள் காலக்கெடுவிற்கு உட்பட்டு தீர்வு செய்யப்படுவதற்கான மதிப்பு அளிக்கப்பட வேண்டும் - மேல்முறையீட்டாளர் தாமதத்திற்கான எந்தவொரு உறுதியான காரணத்தையும் கொடுக்கவோ அல்லது முயற்சிக்கவோ தவறிவிட்டார், இருப்பினும், உயர்நீதிமன்றம் தவறுதலாக ஒகு டெக் நிறுவன வழக்கின் விகிதத்தை சார்ந்திருந்தது என்பதில் அவர் சொல்வது சரிதான் - வழக்கின் தனித்துவமான சூழ்நிலைகளில் எடுக்கப்பட்ட கடுமையற்ற தீர்முடிவு - தன்னிச்சையாக செயல்பட்டது முன்னுதாரணமாக இல்லை - 02.11.2017 அன்று (உரிமை கோரப்பட்டபடி) மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வாதுரை, எதிர்மேல்முறையீட்டாளருக்கு ரூ.25,000/- செலவுகளை செலுத்துவதற்கு உட்பட்டு, இன்றிலிருந்து ஒரு வார காலத்திற்குள் எதிர்மேல்முறையீட்டாளரின் வழக்குரைஞரிடம் நகலுடன் பதிவு செய்ய வேண்டும் - கீழமை நீதிமன்றங்களின்

உத்தரவுகள் செய்யப்படுகின்றன - வணிக நீதிமன்றங்கள் சட்டம், 2015 - பிரிவுகள் 2 (சி) மற்றும் 16.

வணிக நீதிமன்றங்கள் சட்டம், 2015 - பிரிவுகள் 2 (சி) மற்றும் 16 - வணிக தகராறுகளுக்கு அதன் பயன்பாட்டில் உ.ந.மு.ச-வின் சட்ட திருத்தம் - முடிவு: மேற்கூறிய சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு, உரிமையியல் நடைமுறையில் இரண்டு விதிமுறைகள் உள்ளன, இதில் வணிக தகராறுகள் [மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 2 (சி)-ன்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளபடி] மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 16-ஆல் திருத்தப்பட்ட உரிமையியல் நடைமுறைச் சட்டத்தால் நிர்வகிக்கப்படுகின்றன; மற்ற அனைத்து வணிகம் அல்லாத தகராறுகளும் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் திருத்தப்படாத / அசல் விதிகளின் வரம்பிற்குள் வருகின்றன - உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908 – கட்டளை VIII, விதி 1.

மேல்முறையீட்டை முடிவு செய்த இந்நீதிமன்றம் தீர்மானித்ததாவது :

1.1. வணிக தகராறுகள் குறித்த விண்ணப்பத்தில், உரிமையியல் நடைமுறைச் சட்டமானது, 2015-ஆம் ஆண்டின் வணிக நீதிமன்றங்கள் சட்டத்தின் பிரிவு 16 மூலம் திருத்தியமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, மேற்சொன்ன சட்டத்தின்படி நடைமுறைக்கு வரும் பணியிடங்கள் உரிமையியல் சட்டத்தின் இரு விதிமுறைகளை கொண்டது என்பது தெளிவாகிறது. அதேசமயம், வணிக தகராறுகள் [மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 2 (சி)-ன்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளபடி] மேற்கூறிய

சட்டத்தின் பிரிவு 16-ஆல் திருத்தப்பட்ட உரிமையியல் நடைமுறைச் சட்டத்தால் நிர்வகிக்கப்படுகின்றன; மற்ற அனைத்து வணிகம் அல்லாத தகராறுகளும் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் திருத்தப்படாத (அல்லது அசல்) விதிகளின் வரம்பிற்குள் வருகின்றன. எதிர்மேல்முறையீட்டாளர் வழக்குரைஞர், வணிகம் சாரா பிரச்சனைகளில் வாதாடவில்லை, மேலும் சுயாதீனமாகவும் கூட இங்கு அசையா சொத்தின் தன்மையானது, "வணிகம் அல்லது தொழிலுக்கு மட்டுமே பிரத்யோகமாக பயன்படுத்தப்படுவதால்" 2015, வணிக நீதிமன்ற சட்டத்தின் பிரிவு 2 (சி)-ன் கீழும், அதில் குறிப்பாக உட்கூறு (vii)-ன் அளவுருக்களுக்கு உட்படாது என்பதில் நாங்கள் நிறைவடைகிறோம். எனவே, உயர்நீதிமன்றம் பிரச்சனையின் தன்மையை கவனிக்கவில்லை என்றும், வணிக தகராறுகளுக்கு மட்டுமே பொருந்தக்கூடிய உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் திருத்தப்பட்ட விதிகளின் அடிப்படையில் தீர்ப்பளிக்கப்பட்ட வழக்கின் விகிதத்தை தவறாகப் பயன்படுத்தியது என்ற மேல்முறையீட்டாளரின் வாதம் சரியானது ஆகும்.

அட்காம் டெக்னாலஜிஸ் லிமிடெட் -எதிர்- ஒய்.ஏ. சுனாவாலா மற்றும் நிறுவனம் **(2018) 6 எஸ்சிசி 639 – சார்வுறப்பட்டது.**

1.2. எனினும், உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை VIII விதி 1-ன் திருத்தப்படாத சட்டம், எழுத்தளவில் இருந்தபோதிலும், ஏதேனும் வழக்காடிகளோ அல்லது வழக்குரைஞர்களோ தங்களது சொந்த விருப்பத்தின்படியே மற்றும்/அல்லது வழக்கை நீட்டிக்கும் பொருட்டு எதிருரை தாக்கல் செய்வதற்கு உரிமை

வழங்கப்பட்டுள்ளது என்று பொருள் கூறமுடியாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் வகுத்துரைக்கப்பட்ட காலக்கெடுவின் பின்புலத்தில் உள்ள சட்டத்தின் உட்கருத்தைப் பொறுத்தவரையில் தகராறுகள் காலக்கெடுவிற்கு உட்பட்டு தீர்வு செய்யப்படுவதற்கான மதிப்பு அளிக்கப்பட வேண்டும். கட்டளை VIII விதி 1-ன் கீழான கால தாமதத்தின் பொறுப்பை போன்று நீதிமன்றங்களின் உள்ளுரை விருப்ப அதிகாரமானது, நன்கு வரையறுக்கப்பட்ட ஒன்றாகும், மேலும் அதன் வரம்பெல்லையானது காலப்போக்கில் நீதிசார் தீர்முடிவுகள் மூலம் வழங்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, செயல்திறன் மிக்க கட்டுப்பாடுடைய தன்மைக்கு அப்பால், தரப்பினர்களின் கட்டுப்பாட்டிற்கு மேற்பட்ட காரணங்களினால் ஏற்படும் கடுமையான இடர்பாடுகள் அல்லது காலதாமதங்கள், அக்காலதாமதத்தை மன்னிப்பதற்கான நேர்மையான நெறியுடைய சான்றாகும். இருப்பினும், மேல்முறையீட்டாளருக்கு ஏராளமான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்பது பதிவுருக்களின் சங்கதிகளிலிருந்து தெளிவாகிறது. அவருக்கு 01.05.2017 தேதியன்று அறிவிப்பு சார்வு செய்யப்பட்டு, 15.05.2017 தேதியன்று அவரது வழக்குரைஞர் மூலம் முன்னிலையானார். உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை VIII விதி 1-ன்படி, மேல்முறையீட்டாளர் 31.05.2017-க்குள் எதிருரையை தாக்கல் செய்ய வேண்டும்; அது 30.07.2017-க்கு மேற்பட்டு தாக்கல் செய்யப்படக்கூடாது. கட்டளை VIII, விதி 1-ன்படி, 'அசல்' உத்தரவில் வரையறுக்கப்பட்டுள்ள 90 நாட்கள் கால வரம்பிற்குள் எதிருரை தாக்கல் செய்யப்படுவதற்கான இரு தனி காலக்கெடுவிற்கு மேற்பட்டு உரிமையியல்

நீதிமன்றமானது 90 நாட்கள் காலம் நிறைவடைந்த போதிலும் தொகை ரூ. 3000/- செலுத்துவதற்கு உட்பட்டு 18.09.2017 அன்று வரை கடைசி மட்டும் இறுதி வாய்ப்பை அளித்துள்ளது. இந்த காலக்கெடுக்கள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. 11.10.2017 அன்று, எதிருரை தாக்கல் செய்வதற்கான மேல்முறையீட்டாளரின் வாய்ப்பை நீதிமன்றம் இறுதியில் முடிவு செய்து, பதிவுருக்களில் உள்ள அவரது எதிர்வாதத்தை நீக்கிய போதிலும், சட்ட நடைமுறையை நிறைவேற்றுவதற்கு அவர் எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. 02.11.2017 அன்று, கட்டளை VIII, விதி 1-இன் வகையங்களின் கீழ் அதிகபட்ச நீட்டிப்பு காலத்திற்குப் பிறகு 95 நாட்கள் தாமதத்திற்குப் பிறகு, மேல்முறையீட்டாளர் தனது எதிர்வாதுரையை தாக்கல் செய்ததாகக் கூறினார். எனினும், 03.11.2017 அன்று நடந்த அடுத்த விசாரணையில் கூட, உரிமையியல் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளபடி, மேல்முறையீட்டாளர் எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிருரையின் நகலை வழங்கத் தவறிவிட்டார்.

1.3. தொடர்ச்சியான மற்றும் வெளிப்படையான தவறுகை தொடர்பாக எதிர்தரப்பால் முன்வைக்கப்படும் வாதம் யாதெனில், மேல்முறையீட்டாளரின் வழக்குரைஞர் வரவில்லை என்பதாகும். எந்தவிதமான நன்கு நிறுவப்பட்ட நியாயம் அல்லது விளக்கத்தை வழங்கவும் எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை, மேலும் மேல்முறையீட்டாளர் ஒரு சாதாரண முறையில் மன்னிப்பை கோருகிறார் என்பது தெளிவாகிறது. இது அனுமதிக்கப்படவோ அல்லது ஊக்குவிக்கப்படவோ கூடாது. மேல்முறையீட்டாளர் தனது எதிருரையை வழக்குரைஞர் மூலமாகவோ அல்லது

நேரடியாகவோ தாக்கல் செய்வதைத் தடுக்க எதுவும் இல்லை என்பது பதிவுகளில் இருந்து தெளிவாகிறது. எனவே, தாமதத்திற்கான எந்தவொரு உறுதியான காரணத்தையும் அவர் வழங்கத் தவறிவிட்டார், மேலும் உயர் நீதிமன்றம் மேற்படி ஓகு டெக் என்ற வழக்கின் விகிதத்தை தவறாக சார்ந்திருந்தாக அவர் சமர்ப்பித்தது சரியானது என்றாலும், அவரது தரப்பில் உரிய விடாமுயற்சியை பூர்த்தி செய்ய முடியவில்லை. அவ்வாறு கருதி, இம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்வதைத் தவிர வேறு வழியில்லை. இருப்பினும், வழக்கின் தனித்துவமான சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், ஒரு முன்னுதாரணமாக, பின்னர் பயன்படுத்தப்படும் விருப்புரிமையை நிர்ணயிக்காமல், 02.11.2017 அன்று (கோரியுள்ளபடி) மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையானது, இன்றிலிருந்து ஒரு வாரத்திற்குள் எதிர்மேல்முறையீட்டாளரின் வழக்குரைஞருக்கு நகலுடன் பதிவு செய்யப்பட வேண்டும் என்றும், மேலும் எதிர்மேல்முறையீட்டாளருக்கு ரூ.25,000/- செலவுத்தொகையாக செலுத்தவேண்டும். கீழமை நீதிமன்றங்களின் உத்தரவுகள் நீக்கறவு செய்யப்பட்டு, மேல்முறையீடு மேற்கண்ட விதிமுறைகளின்படி தீர்வு செய்யப்படுகிறது.

ஓகு டெக் பிரைவேட் லிமிடெட் -எதிர்- சங்கீத் அகர்வால் மற்றும் பலர் (2016) **எஸ்சிசி ஆன்லைன் டெல்** 6601; சேலம் வழக்குரைஞர் பார் அசோசியேஷன், தமிழ் நாடு -எதிர்- இந்திய ஒன்றியம் (2005) 6 **எஸ்சிசி** 344 : [2005] 1 **சப்ளிமெண்ட் எஸ்சிஆர்** 929; தி/ள். எஸ்சிஜி கான்ட்ராக்ட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் -எதிர்- கே.எஸ்.

சமன்கர் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் மற்றும் பலர்

ஏஐஆர் 2019 எஸ்சி 2691 – குறிப்பிடப்பட்டுள்ளது.

பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்

[2005] 1 சப்ளிமெண்ட் எஸ்சிஆர் 929	**குறிப்பிடப்பட்டுள்ளது**	**பத்தி 8**
ஏஐஆர் 2019 எஸ்சி 2691	**குறிப்பிடப்பட்டுள்ளது**	**பத்தி 13**
(2018) 6 எஸ்சிசி 639	**சார்வுறப்பட்டது**	**பத்தி 14**

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : உரிமையியல் மேல்முறையீடு எண்.433/2020.

புது டெல்லியிலுள்ள டெல்லி உயர்நீதிமன்றத்தின் சி.எம்(எம்) எண்.1370/2018-இல் 26.11.2018 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

மேல்முறையீட்டாளருக்காக - அனிலேந்திரா பாண்டே.

எதிர்மேல்முறையீட்டாளருக்காக - செல்வி. அபர்ணா ஜா.

கீழ்க்கண்ட தீர்ப்புரையானது இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டது.

தீர்ப்புரை

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. இந்த உரிமையியல் மேல்முறையீடு டெல்லி உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட 26.11.2018 தேதியிட்ட உத்தரவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது,

இதன் மூலம் உரிமையியல் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டாளரின் சீராய்வு மனு, உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908 (இதற்குப்பிறகு "உ.ந.ச.")-இன் கட்டளை VIII விதி 1-ன் கீழான எதிருரையை தாக்கல் செய்வதற்கான உரிமையை நிறுத்தியது, மேலும் தொடர்ச்சியான தாமதங்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவை பின்பற்றாததால் அவர் எதிர்த்துரைப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படாமல் தள்ளுபடி செய்யப்பட்டது.

பொருண்மைகள்

3. மேல்முறையீட்டாளரும், எதிர்மேல்முறையீட்டாளரும் சகோதரர்கள் மற்றும் டெல்லி, தேவ்லி கிராமத்தில் எண் 142 கொண்ட பூர்வீக சொத்தின் தலா ஒரு தளத்திற்கு உரிமையுடையவர்கள் ஆவர். தரைத்தளம், எதிர்மேல்முறையீட்டாளருக்கு உடைமை மற்றும் உரிமையில் இருந்த சொத்து மற்றும் முதல் தளமானது மேல்முறையீட்டாளரின் பெயரில் இருந்தது.

4. பிப்ரவரி 2017-ல், எதிர்மேல்முறையீட்டாளர் பூர்வீக சொத்தின் முதல் தளத்தை வாங்க முன்வந்து மேல்முறையீட்டாளரை அணுகியதாகக் கூறப்பட்டது. அதைத்தொடர்ந்து, 17.03.2017 அன்று இரு தரப்பினருக்கும் இடையே மொத்தம் ரூ.7.5 லட்சத்திற்கு விற்பனை செய்வதற்கான ஒப்பந்தம் ஏற்ப்பட்டது, அதில் ரூ.1 லட்சம் மேல்முறையீட்டாளருக்கு முன்பணமாக செலுத்தப்பட்டது. இந்த ஒப்பந்தம் பின்னர் நடைமுறைப்படுத்தப்படவில்லை, 13.04.2017 அன்று, எதிர்மேல்முறையீட்டாளரால் மேல்முறையீட்டாளருக்கு ஒரு சட்ட அறிவிப்பு வழங்கப்பட்டது, அவர் மறுபயனை

ஏற்றுக் கொண்டு ஒப்பந்தத்தின் தனது பகுதியை நிறைவேற்றும்படி கேட்டுக் கொண்டார்.

5. மேல்முறையீட்டாளர் வழக்கு சொத்தை மூன்றாம் தரப்பினருக்கு விற்க முயற்சிப்பதாகக் கூறியும், பின்னர், மீதமுள்ள விற்பனை மறுபயனை பெறவும், விற்பனை ஆவணத்தை எதிர்மேல்முறையீட்டாளருக்கு ஆதரவாக நிறைவேற்றவும்/பதிவு செய்யும்படி மேல்முறையீட்டாளருக்கு உத்தரவிடக்கோரியும், 17.03.2017 தேதியிட்ட விற்பனை ஒப்பந்தத்தின் குறித்தவகை நிறைவேற்றுகை குறித்த உத்தரவுக்காக எதிர்மேல்முறையீட்டாளர் உரிமையியல் நீதிமன்றத்தை அணுகினார். கூடுதலாக, எந்தவொரு மூன்றாம் தரப்பினருக்கும் ஆதரவாக சொத்தை உடைமை மாற்றம் செய்யாமலிருக்க மேல்முறையீட்டாளருக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவைப் பெற எதிர்மேல்முறையீட்டாளர் முயற்சி செய்தார். மாற்றாக, நிலுவையிலுள்ள இழப்பீட்டுத் தொகை மற்றும் வருங்கால வட்டி விகிதம் ஆண்டுக்கு 18 சதவீதமாக ரூ.2 லட்சம் இழப்பீடாக எதிர்மேல்முறையீட்டாளரால் கோரப்பட்டது.

6. 01.05.2017 அன்று மேல்முறையீட்டாளருக்கு சார்வு செய்யப்பட்டு, அவர் 15.05.2017 அன்று வழக்குரைஞர் மூலம் முன்னிலையானார், உரிமையியல் நீதிமன்றம், மேல்முறையீட்டாளர் தனது எதிருரையை தாக்கல் செய்ய 30 நாள்கள் கால அவகாசம் வழங்கியது. 17.07.2017 அன்று, அதுவரை எதிருரை ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதைக் குறிப்பிட்ட நீதிமன்றம் மேல்முறையீட்டாளருக்கு தனது எதிருரையை தாக்கல் செய்ய இறுதியாக இரண்டு வார கால அவகாசத்தை வழங்கியது. 18.09.2017

தேதியன்று, கடைசி வாய்ப்பு இரண்டு மாதங்களுக்கு முன்பே வழங்கப்பட்ட போதிலும், எதிருரை ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்று நீதிமன்றம் குறிப்பிட்டது. ஆயினும், ரூ.3,000/- செலவுத்தொகையை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன், நீதிமன்றம் மற்றொரு கடைசி வாய்ப்பை வழங்கியதுடன், இவ்வழக்கை 11.10.2017 தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டது. இந்த தேதியில், மேல்முறையீட்டாளர் பலமுறை ஒத்திவைப்புகளை கோரியும், அவரது வழக்குரைஞர் நீதிமன்றத்தில் முன்னிலையகவில்லை. எதிருரையை தாக்கல் செய்வதற்கான பல வாய்ப்புகள் இருந்தபோதிலும் (அதிகபட்சமாக 90 நாள்களுக்கு அப்பால் ஒன்று உட்பட) மேல்முறையீட்டாளர் எந்தவொரு எதிருரையையோ அல்லது வைப்பீட்டுத் தொகையையோ தாக்கல் செய்யத் தவறிவிட்டார் என்பதாலும், இவ்வழக்கை மீண்டும் மீண்டும் ஒத்திவைக்க முடியாது என்பதை கவனித்த உரிமையியல் நீதிமன்றம், மேல்முறையீட்டாளருக்கு எதிருரையை தாக்கல் செய்வதற்கான வாய்ப்பை நிறுத்தியதன் மூலம் அவர் எதிர்த்துரைப்பதற்கான வாய்ப்பையும் வழங்கவில்லை. 03.11.2017 அன்று அடுத்த விசாரணையின்போதும், மேல்முறையீட்டாளரின் வழக்குரைஞர் முன்னிலையாகவோ அல்லது எதிர்மேல்முறையீட்டாளரிடம் எதிருரையின் நகலையோ வழங்கவில்லை என்று விசாரணை நீதிமன்றத்தின் தினசரி உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

7. இதனால் மனக்குறையுற்ற மேல்முறையீட்டாளர், சீராய்வு மனு மூலம் உயர் நீதிமன்றத்தை அணுகினார், அதில் அவருக்கு பலமுறை வாய்ப்புகள் வழங்கப்பட்டும் 120

நாட்களுக்குள் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை என்றும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஓகு டெக் பிரைவேட் லிமிடெட் -எதிர்- சங்கீத் அகர்வால் மற்றும் பலர் (2016) எஸ்சிசி ஆன்லைன் டெல் 6601 என்ற வழக்கில், அதன் ஒருங்கிணைந்த அமர்வின் உத்தரவை சார்ந்திருந்ததன் அடிப்படையில், எதிருரையை தாக்கல் செய்வதற்கான காலத்தை 120 நாள்களுக்கு மேல் நீட்டிக்க நீதிமன்றங்களுக்கு எவ்வித விருப்புரிமையும் இல்லை என்ற காரணத்தின் அடிப்படையில், டெல்லி உயர்நீதிமன்றம் இம்மனுவை சுருக்கமாக தள்ளுபடி செய்தது.

தரப்பினர்களின் வாதுரைகள்

8. வணிக நீதிமன்றங்கள் சட்டம், 2015-ல் திருத்தப்பட்ட உ.ந.ச., கட்டளை VIII விதி 1-ன் அடிப்படையில் வழங்கப்பட்டதால், மேற்படி ஓகு டெக் என்ற வழக்கின் மீதான நம்பகத்தன்மை தவறானது என்பது மேல்முறையீட்டாளரின் முதன்மை வாதமாகும், இது வணிக தகராறுகளுக்கு மட்டுமே பொருந்தும். தற்போதைய வழக்கு வணிகரீதியானது அல்ல என்று சுட்டிக்காட்டப்பட்டது, மேலும் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் திருத்தப்படாத கட்டளை VIII விதி 1 பொருந்தும் என்றும் வலியுறுத்தப்பட்டது, இதில் 90 நாட்கள் என்ற குறுகிய காலக்கெடுவை பின்பற்றாததற்கு எந்த விளைவுகளும் வரையறுக்கப்படவில்லை. இவ்வகையங்கள், சேலம் வழக்குரைஞர் பார் அசோசியேஷன், தமிழ் நாடு -எதிர்- இந்திய ஒன்றியம் (2005) 6 எஸ்சிசி 344 என்ற வழக்கின் தீர்ப்பு உட்பட பல்வேறு தீர்ப்புகளில் இந்த நீதிமன்றம் கூறிய நடைமுறை மற்றும் உடனிணைந்த விதி மட்டுமே என்று வாதிடப்பட்டது.

9. இந்நிலையில், மேல்முறையீட்டாளர், ஒரு வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, 90 நாள்கள் கால அவகாசத்தை தளர்த்தலாம் என்று தனது வாதத்தை முன்வைத்தார்; மேலும் அவர் விசாரணை நடைபெற்ற அனைத்து தேதிகளிலும் தனிப்பட்ட முறையில் முன்னிலையானதாகவும், இந்தத் தவறுகையானது அவரது வழக்குரைஞர் தரப்பில் இருந்ததால் எதிருரை தாக்கல் செய்ய முடியவில்லை என்று வாதிட்டார். கால தாமதம் மன்னிக்கப்படவில்லையெனில், உரிமையியல் வழக்கில் அவர் எதிர்த்துரைப்பதற்கான வாய்ப்பு மறுக்கப்படும் பட்சத்தில், அவருக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என்று மேல்முறையீட்டாளர் கோருகிறார். அதன்படி, இந்நீதிமன்றம் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை VIII விதி 1-ன்கீழ் அதன் உள்ளார்ந்த விருப்புரிமையைப் பயன்படுத்தி, தனது எதிருரையை தாக்கல் செய்ய ஒரு இறுதி வாய்ப்பை வழங்குமாறு அவர் கோருகிறார்.

10. உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை VIII விதி I-ன் கீழான எதிருரையை தாக்கல் செய்ய வழங்கப்பட்ட அதிகபட்ச சட்டப்பூர்வ காலமான 90 நாட்களுக்கு அப்பால் உள்ள வாய்ப்புகள் உட்பட, உரிமையியல் நீதிமன்றத்தால் மேல்முறையீட்டாளருக்கு ஏற்கனவே பல வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன எதிர்மேல்முறையீட்டாளர் சார்பில் எதிர்க்கப்பட்டது. உரிமையியல் நீதிமன்றம் நிர்ணயித்த பல காலக்கெடுவை தொடர்ச்சியாக கடைப்பிடிக்கத் தவறியதும், நீதிமன்ற வழிகாட்டுதல்களை மீறியதும், மேல்முறையீட்டாளர் தரப்பிலான ஒட்டுமொத்த அலட்சியத்தின் சான்றாகும், மேலும் வேண்டுமென்றே தாமதப்படுத்தும் உத்தியை

கையாண்டும், சட்டத்தின் நடைமுறையை மிக மோசமான நிலையில் தவறாகப் பயன்படுத்தியதாகவும் வாதிடப்பட்டது.

பகுப்பாய்வு மற்றும் முடிவு

11. வெளிப்படையாக, வணிக தகராறுகள் குறித்த விண்ணப்பத்தில், உரிமையியல் நடைமுறைச் சட்டமானது, 2015-ஆம் ஆண்டின் வணிக நீதிமன்றங்கள் சட்டத்தின் பிரிவு 16 மூலம் திருத்தியமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது, அது பின்வருமாறு :-

> "16. வணிக தகராறுகள் குறித்த விண்ணப்பத்தில் 1908, உரிமையியல் நடைமுறைச் சட்ட திருத்தங்கள் - (1) 1908 (5/1908), உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் வகையங்கள், குறிப்பிட்ட மதிப்பின் வணிக தகராறுகள் தொணடர்புடைய வழக்கில், அவர்களது விண்ணப்பம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதை போன்று திருத்தப்படும்.
>
> (2) குறிப்பிட்ட மதிப்புடைய வணிக தகராறுகள் தொடர்பான உரிமை வழக்கு விசாரணையில், வணிகப் பிரிவுகள் மற்றும் வணிக நீதிமன்றங்கள், இச்சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளவாறு, 1908 (5/1908) உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் வகையங்களை பின்பற்றும்.
>
> (3) இச்சட்டத்தில் திருத்தப்பட்டுள்ளவாறு, 1908 (5/1908) உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் வகையங்களுடன்

உயர்நீதிமன்ற அதிகார வரம்பின் ஏதேனும் விதிகளின் வகையமோ அல்லது மாநில அரசின் 1908 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் ஏதேனும் சட்டத்திருத்தம் முரண்பட்டு இருந்தால், இச்சட்டத்தால் திருத்தப்பட்ட உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் வகையங்கள் மேலோங்கி இருக்கும்."

12. எனவே, மேற்சொன்ன சட்டத்தின்படி நடைமுறைக்கு வரும் பணியிடங்கள் உரிமையியல் சட்டத்தின் இரு விதிமுறைகளை கொண்டது என்பது தெளிவாகிறது. அதேசமயம், வணிக தகராறுகள் [மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 2 (சி)-ன்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளபடி] மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 16-ஆல் திருத்தப்பட்ட உரிமையியல் நடைமுறைச் சட்டத்தால் நிர்வகிக்கப்படுகின்றன; மற்ற அனைத்து வணிகம் அல்லாத தகராறுகளும் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் திருத்தப்படாத (அல்லது அசல்) விதிகளின் வரம்பிற்குள் வருகின்றன.

13. தி/ள். எஸ்சிஜி கான்ட்ராக்ட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் -எதிர்- கே.எஸ். சமன்கர் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் மற்றும் பலர் ஏஐஆர் 2019 எஸ்சி 2691 என்ற வழக்கில், அண்மையில் இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டவாறு, மேற்படி ஓகு டெக் என்ற வழக்கில் சார்ந்து நின்ற கற்றறிந்த தனி நீதிபதியின் தீர்ப்புரை, சட்டப்படி சரியானது என்பதில் ஐயப்பாடு ஏதுமில்லை, எனினும், உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை VIII விதி 1-ன் சட்டத்திருத்தத்தின் படியே வணிக தகராறுகளுக்கான தீர்வு அளிக்கப்பட்டுள்ளதால் எதிருரை தாக்கல் செய்வதற்காக

வகுத்துரைக்கப்பட்ட காலக்கெடுவின் கட்டாயத் தன்மை தொடர்புடைய அதன் அகவுரை மற்றும் கால தாமதத்தை மன்னிப்பதற்கான நீதிமன்றத்தின் அதிகாரமின்மை ஆகியவை வணிக தகராறுகளுக்கு மட்டுமே பொருந்தக்கூடியதாக உள்ளது.

14. வணிகமற்ற தகராறில், எதிருரையை தாக்கல் செய்வதற்கான காலக்கெடுவைப் பொறுத்தவரை, இந்நீதிமன்றம், சமீபத்தில் அட்காம் டெக்னாலஜிஸ் லிமிடெட் -எதிர்- ஒய்.ஏ. சுனாவாலா மற்றும் நிறுவனம் (2018) 6 எஸ்சிசி 639 என்ற வழக்கில், அதன் தொடர்ச்சியான தீர்ப்புகளில் அளித்த கருத்துக்களை முன்வைத்துள்ளது. உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை VIII விதி 1 திருத்தப்படாத வகையம் ஆனது, சட்டத்தின் விதிகள் அடங்கிய வகையத்திலேயே தொடரும்,மேலும் காலதாமதத்தை மன்னிப்பது தொடர்புடைய நீதிமன்றத்தின் உள்ளுரை விருப்ப அதிகாரத்தை நீக்காது.

15. எனவே, மேல்முறையீட்டாளர் அத்தகைய விருப்புரிமை அதிகார வரம்பைப் பயன்படுத்துவதற்கான ஒரு வழக்கை உருவாக்கியுள்ளாரா என்பதை நாம் பரிசீலிப்போம்? தற்போதைய உரிமையியல் வழக்கு, டெல்லி, தேவ்லி கிராமத்தில் உள்ள ஒரு பூர்வீக சொத்தின் ஒரு தளத்தை விற்பனை செய்வதற்கான ஒப்பந்தத்தின் குறித்த வகை நிறைவேற்றுகை மற்றும் மனுதாரரால், மூன்றாம் தரப்பினருக்கு உடைமை மாற்றம் செய்யப்படுவதற்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை தீர்ப்பாணை கோரி எதிர்மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்டது. எதிர்மேல்முறையீட்டாளர் வழக்குரைஞர், வணிகம் சாரா பிரச்சனைகளில் வாதாடவில்லை, மேலும்

சுயாதீனமாகவும் கூட இங்கு அசையா சொத்தின் தன்மையானது, "வணிகம் அல்லது தொழிலுக்கு மட்டுமே பிரத்யோகமாக பயன்படுத்தப்படுவதால்" 2015, வணிக நீதிமன்ற சட்டத்தின் பிரிவு 2 (சி)-ன் கீழும், அதில் குறிப்பாக உட்கூறு (vii)-ன் அளவுருக்களுக்கு உட்படாது என்பதில் நாங்கள் நிறைவடைகிறோம். எனவே, உயர்நீதிமன்றம் பிரச்சனையின் தன்மையை கவனிக்கவில்லை என்றும், வணிக தகராறுகளுக்கு மட்டுமே பொருந்தக்கூடிய உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் திருத்தப்பட்ட விதிகளின் அடிப்படையில் தீர்ப்பளிக்கப்பட்ட வழக்கின் விகிதத்தை தவறாகப் பயன்படுத்தியது என்ற மேல்முறையீட்டாளரின் வாதம் சரியானது ஆகும்.

16. எனினும், உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை VIII விதி 1-ன் திருத்தப்படாத சட்டம், எழுத்தளவில் இருந்தபோதிலும், ஏதேனும் வழக்காடிகளோ அல்லது வழக்குரைஞர்களோ தங்களது சொந்த விருப்பத்தின்படியே மற்றும்/அல்லது வழக்கை நீட்டிக்கும் பொருட்டு எதிருரை தாக்கல் செய்வதற்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது என்று பொருள் கூறமுடியாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் வகுத்துரைக்கப்பட்ட காலக்கெடுவின் பின்புலத்தில் உள்ள சட்டத்தின் உட்கருத்தைப் பொறுத்தவரையில் தகராறுகள் காலக்கெடுவிற்கு உட்பட்டு தீர்வு செய்யப்படுவதற்கான மதிப்பு அளிக்கப்பட வேண்டும். கட்டளை VIII விதி 1-ன் கீழான கால தாமதத்தின் பொறுப்பை போன்று நீதிமன்றங்களின் உள்ளுரை விருப்ப அதிகாரமானது, நன்கு வரையறுக்கப்பட்ட ஒன்றாகும், மேலும் அதன் வரம்பெல்லையானது காலப்போக்கில் நீதிசார் தீர்முடிவுகள்

மூலம் வழங்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, செயல்திறன் மிக்க கட்டுப்பாடுடைய தன்மைக்கு அப்பால், தரப்பினர்களின் கட்டுப்பாட்டிற்கு மேற்பட்ட காரணங்களினால் ஏற்படும் கடுமையான இடர்பாடுகள் அல்லது காலதாமதங்கள், அக்காலதாமதத்தை மன்னிப்பதற்கான நேர்மையான நெறியுடைய சான்றாகும்.

17. இருப்பினும், மேல்முறையீட்டாளருக்கு ஏராளமான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்பது பதிவுருக்களின் சங்கதிகளிலிருந்து தெளிவாகிறது. அவருக்கு 01.05.2017 தேதியன்று அறிவிப்பு சார்வு செய்யப்பட்டு, 15.05.2017 தேதியன்று அவரது வழக்குரைஞர் மூலம் முன்னிலையானார். உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை VIII விதி 1-ன்படி, மேல்முறையீட்டாளர் 31.05.2017-க்குள் எதிருரையை தாக்கல் செய்ய வேண்டும்; அது 30.07.2017-க்கு மேற்பட்டு தாக்கல் செய்யப்படக்கூடாது. கட்டளை VIII, விதி 1-ன்படி, 'அசல்' உத்தரவில் வரையறுக்கப்பட்டுள்ள 90 நாட்கள் கால வரம்பிற்குள் எதிருரை தாக்கல் செய்யப்படுவதற்கான இரு தனி காலக்கெடுவிற்கு மேற்பட்டு உரிமையியல் நீதிமன்றமானது 90 நாட்கள் காலம் நிறைவடைந்த போதிலும் தொகை ரூ. 3000/- செலுத்துவதற்கு உட்பட்டு 18.09.2017 அன்று வரை கடைசி மட்டும் இறுதி வாய்ப்பை அளித்துள்ளது. இந்த காலக்கெடுக்கள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. 11.10.2017 அன்று, எதிருரை தாக்கல் செய்வதற்கான மேல்முறையீட்டாளரின் வாய்ப்பை நீதிமன்றம் இறுதியில் முடிவு செய்து, பதிவுருக்களில் உள்ள அவரது எதிர்வாதத்தை நீக்கிய போதிலும், சட்ட நடைமுறையை நிறைவேற்றுவதற்கு அவர் எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

18. 02.11.2017 அன்று, கட்டளை VIII, விதி 1-இன் வகையங்களின் கீழ் அதிகபட்ச நீட்டிப்பு காலத்திற்குப் பிறகு 95 நாட்கள் தாமதத்திற்குப் பிறகு, மேல்முறையீட்டாளர் தனது எதிர்வாதுரையை தாக்கல் செய்ததாகக் கூறினார். எனினும், 03.11.2017 அன்று நடந்த அடுத்த விசாரணையில் கூட, உரிமையியல் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளபடி, மேல்முறையீட்டாளர் எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிருரையின் நகலை வழங்கத் தவறிவிட்டார்.

19. தொடர்ச்சியான மற்றும் வெளிப்படையான தவறுகை தொடர்பாக எதிர்தரப்பால் முன்வைக்கப்படும் வாதம் யாதெனில், மேல்முறையீட்டாளரின் வழக்குரைஞர் வரவில்லை என்பதாகும். எந்தவிதமான நன்கு நிறுவப்பட்ட நியாயம் அல்லது விளக்கத்தை வழங்கவும் எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை, மேலும் மேல்முறையீட்டாளர் ஒரு சாதாரண முறையில் மன்னிப்பை கோருகிறார் என்பது தெளிவாகிறது. இது அனுமதிக்கப்படவோ அல்லது ஊக்குவிக்கப்படவோ கூடாது. அனைத்து நீதிசார் நடவடிக்கைகளும் நியாயமான காலக்கெடுவிற்குள் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை நீதிமன்றங்கள் கண்டிப்புடன் உறுதி செய்யவேண்டும் என்றும், காலக்கெடு, நீதிமன்றத்தின் அவகாசம், அதன் அதிகாரிகள் மற்றும் வழக்குரைஞர்கள் ஆகியவற்றிற்கு மதிப்பளிக்கும் இயல்வை வளர்ப்பது நீதிசார் நடைமுறையின் கடமை என்பதும் ஆகும்.

20. வழக்கமான மன்னிப்புக் கோரல்கள் மற்றும் சட்ட நடைமுறைகள் குறித்த அலட்சியமான அணுகுமுறைகள் நீதி வழங்குதலை பாதிப்படைய செய்கிறது. இது

நீதிமன்ற நிர்வாகத்தை பாதிப்பதுடன், தவிர்க்கக்கூடிய காலதாமதம், செலவு அதிகரிப்பு மற்றும் ஒழுங்கற்ற நிலையை ஏற்படுத்துகிறது. இதன் விளைவானது வழக்காடிகளுக்கு மட்டுமல்ல, தொழில்நுட்ப செயல்முறைகளில் பல தசாப்தங்களாக சிக்கித் தவிக்கும் நாட்டின் வர்த்தகம் மற்றும் பொதுமக்களுக்கும் ஏற்படுகிறது.

21. மேல்முறையீட்டாளர் தனது எதிருரையை வழக்குரைஞர் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தாக்கல் செய்வதைத் தடுக்க எதுவும் இல்லை என்பது பதிவுகளில் இருந்து தெளிவாகிறது. எனவே, தாமதத்திற்கான எந்தவொரு உறுதியான காரணத்தையும் அவர் வழங்கத் தவறிவிட்டார், மேலும் உயர் நீதிமன்றம் மேற்படி ஓகு டெக் என்ற வழக்கின் விகிதத்தை தவறாக சார்ந்திருந்தாக அவர் சமர்ப்பித்தது சரியானது என்றாலும், அவரது தரப்பில் உரிய விடாமுயற்சியை பூர்த்தி செய்ய முடியவில்லை.

22. அவ்வாறு கருதி, இம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்வதைத் தவிர வேறு வழியில்லை. இருப்பினும், வழக்கின் தனித்துவமான சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், ஒரு முன்னுதாரணமாக, பின்னர் பயன்படுத்தப்படும் விருப்புரிமையை நிர்ணயிக்காமல், 02.11.2017 அன்று (கோரியுள்ளபடி) மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையானது, இன்றிலிருந்து ஒரு வாரத்திற்குள் எதிர்மேல்முறையீட்டாளரின் வழக்குரைஞருக்கு நகலுடன் பதிவு செய்யப்பட வேண்டும் என்றும், மேலும் எதிர்மேல்முறையீட்டாளருக்கு ரூ.25,000/- செலவுத்தொகையாக செலுத்தவேண்டும் என்று நாங்கள் உத்தரவிடுகிறோம்.

23. கீழமை நீதிமன்றங்களின் உத்தரவுகள் நீக்கறவு செய்யப்பட்டு, மேல்முறையீடு மேற்கண்ட விதிமுறைகளின்படி தீர்வு செய்யப்படுகிறது.

மேல்முறையீடு தீர்வு செய்யப்பட்டது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்து கொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக் கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல் முறையான நோக்கங்களுக்கும் மற்ற தீர்ப்புரையை நிறைவேற்றறலுக்கும் செயற்படுத்துதலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்".